கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 17.12.2024
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## முதல்வரின் ஆராய்ச்சிக்கான உதவித்தொகைகளை வென்ற கோவை வேளாண் பல்கலை மாணவர்கள்

தகுதிவாய்ந்த முதுகலை மாணவர்களுக்கு ஆராய்ச்சித் தளத்தை வழங்கும் நோக்கத்துடன், தமிழக அரசால் முதலமைச்சர் ஆராய்ச்சி உதவித்தொகை (CMRF) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மாநிலப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் இந்த உதவித் தொகையினை பெறுவதற்கு ஏற்புடையவர்கள். ஆசிரியர் ஆட்சேர்ப்பு வாரியத்தால் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு, மாணவர்கள் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர். இந்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள், 2023–24 ஆம் ஆண்டிற்கான நான்கு CMRF உதவித்தொகைகளை பெற்றுள்ளனர். அறிவியல் பிரிவில், செ.பிரியதர்ஷினி (சுற்றுச்சூழல் அறிவியல்), கு.தா.கார்த்திகா (வேளாண்மை வானிலையியல்), செ. மோகனப்பிரியா (பயிர் நோயியல்) மற்றும் சமூக அறிவியல் பிரிவில் சு.இளமதி (வேளாண்மைப் பொருளாதாரம்) ஆகியோருக்கு CMRF உதவித்தொகை 11.12.2024 அன்று சென்னையிலுள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் உயர்கல்வி அமைச்சர் டாக்டர் கோவி செழியனால் வழங்கப்பட்டது. உதவித்தொகை மாதம் ரூ.25,000 வீதம் மூன்று வருட காலத்திற்கு வழங்கப்படுகிறது. முதுகலை மாணவர்களின் சாதனையை, பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் தே.சுரேஷ் குமார் வெகுவாக பாராட்டினார். வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி மாணவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**